# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**MCOP.No.** 146/2021

| | | |
|---|---|---|
| Name | : | திரு. மணிகண்டன் **Pw1** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of October 2025.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 10 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை 1) வாசுதேவநல்லூர் காவல் நிலையத்தில் கடந்த 05.08.2018 ம் தேதியன்று நடந்த விபத்து பற்றி பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகல் ம.சா.ஆ- 1 ஆகும். 2) மருத்துவ விடுவிப்பு சான்று ம.சா.ஆ- 2 ஆகும். 3) மேற்படி TN-69-AU-5872 என்ற பதிவெண் கொண்ட Mahindra Car வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிசியின் நகல் ம.சா.ஆ. 3 ஆகும். 4) மேற்படி

TN-69-AU-5872 என்ற பதிவெண் கொண்ட Mahindra Car வாகனத்தை ஓட்டி ஓட்டுநரின் அடையாள அட்டையின் நகல் ம.சா.ஆ. 4 ஆகும். 5) ரூ. 7,10,398/- க்கான மெடிக்கல் பில்கள் ம.சா.ஆ.5 ஆகும். (ம.சா-ஆ.5 ஆவணம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது) 6) மனுதாரரின் மருத்துவ பரிந்துரை சீட்டுகளின் எண்ணம் 17 ம.சா.ஆ. 6 வரிசை ஆகும். 7) மனுதாரரின் நுண்கதிர் படங்கள் (எண்ணம் 16) ம.சா.ஆ. 7 வரிசை ஆகும். 8) மனுதாரரின் ஆதார் அடையாள அட்டையின் நகல் ம.சா.ஆ. 8 ஆகும். 9) மனுதாரரின் வங்கி பாஸ் புத்தகத்தின் நகல் ம.சாஆ. 9 ஆகும். 10) காயச்சான்றின் நகல் ம.சா.ஆ. 10 ஆகும். மனுப்படி உத்தரவாக கேட்டுக்கொள்கிறேன்.

**3 ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

TN-69-AY-5872 பதிவெண் கொண்ட மகேந்திரா கார் 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்றால்சரிதான். விபத்து சமயத்தில் 2ம் எதிர்மனுதாரருக்கும் 3ம் எதிர்மனுதாரரான காப்பீடு நிறுவனத்திற்கும் எந்தவிதமான செல்லத்தக்க காப்பீடு ஒப்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரருக்கும், 3ம் எதிர்மனுதாரருக்கும் 31.07.2017 முதல் 30.07.2018 வரை முந்தைய பாலிசி இருந்தது என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்தது 05.08.2018 என்றால் சரிதான். காப்பீடு ஒப்பந்தம் முடிவுற்ற 6 நாட்கள் கழித்து விபத்து நிகழ்ந்துள்ளதால் 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு வழங்கவேண்டியதில்லை என்று சொன்னால் சரியல்ல.

வாகனத்தின் உரிமையாளரிடம் பாலிசி நகல் கேட்டு நான் சட்ட அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தப்பட்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் அதை தாக்கல் செய்தால் எனது தரப்பு வழக்கிற்கு விரோதமாக அமையும் என்பதால் நான் அதை வேண்டுமென்றே தாக்கல் செய்யாமல் தவிர்த்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் விபத்து சமயத்தில் ஆட்டோவில் பயணித்தேன். விபத்து சமயத்தில் ஆட்டோவை நான்தான் ஓட்டிவந்தேன். ஆட்டோவின் உரிமையாளர் யார் என்றால் எனது சித்தப்பா ஆவார். அந்த ஆட்டோவின் உரிமையாளரையும், அதன் காப்பீடு கழகத்தையும் இம்மனுவில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் ஆட்டோவை அதிவேமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று மகேந்திரா வேன் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. விபத்துரோட்டின் மையப்பகுதியில் நடந்தது

என்றால் சரியல்ல, ரோட்டின் ஓரத்தில் தான் நடந்தது. விபத்திற்கு மகேந்திரா வாகனத்தின் ஓட்டுநர் காரணம் கிடையாது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகிவிட்டன என்றால் சரியல்ல, உள்காயம் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ரசீதுகள் அதிகமான இழப்பீடுபெறவேண்டும் என்பதற்காக என்னால் உற்பத்திசெய்யப்பட்டவை என்றால் சரியல்ல. செல்லத்தக்க பாலிசி இல்லாததால் 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi